RS Polyclinic
Dr M. Rajkumar Sr Vascular Surgeon 96410 25996
Dr K. Nanditha Bhuvaneswari Sr Eye Surgeon 9444 255754
Dr Sathish Rajkumar Laparoscopic & Laser Surgeon 9445 401793
Dr Shanthi R Sr Vascular Surgeon 9884 650945
Dr Salma R General Physician 87780 57742
Dr Praveena E Sr ENT Surgeon 9944 100443

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

திருப்பதி ஏழுமலையானுக்கு 121 கிலோ தங்க ஆபரணங்களை வழங்கும் பக்தர்!

திருப்பதி – 22 நவம்பர், 2026 திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு சுமார் ரூ.160 கோடி மதிப்பிலான 121 கிலோ தங்க ஆபரணங்களைப் பக்தர் ஒருவர் காணிக்கையாக வழங்க முன்வந்துள்ளார்.

வரும் நவம்பர் 26-ஆம் தேதி திருமலையில் உள்ள ஏழுமலையானுக்கு இந்தத் தங்க ஆபரணங்கள் காணிக்கையாக வழங்கப்பட உள்ளன.

இதுகுறித்து அரசு அதிகாரி ஒருவர் சனிக்கிழமை பிடிஐ செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், 121 கிலோ எடையிலான தங்க ஆபரணங்கள் நவம்பர் 26-ஆம் தேதி கோயிலில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 45 தங்க ஆபரணங்கள் ஒன்பது தொகுப்புகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு ரூ.150 கோடி முதல் ரூ.160 கோடி வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காணிக்கை தொடர்பாகத் திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட பக்தர் ஏற்கெனவே ஆலோசனைகளை நிறைவு செய்துள்ளார்.

திட்டமிட்டபடி நவம்பர் 26-ஆம் தேதி கோயிலில் உள்ள தேவஸ்தான நிர்வாகத்திடம் தங்க ஆபரணங்கள் முறைப்படி ஒப்படைக்கப்பட உள்ளன.

திருமலை ஏழுமலையானுக்கு ஒரு தனிநபர் வழங்கும் மிகப்பெரிய காணிக்கையாக இது அமையக்கூடும் என தேவஸ்தான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.